[17th March 1960

SRI A. A. RASHEED : What are the steps taken to prevent recurrence of such accidents? What are the reasons for not giving compensation to the families of victims?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The rules require that certain precautionary measures should be taken and if there is any enquiry about the incident, it would have to be examined whether these precautionary measures had been taken.

SRI M. KALYANASUNDARAM : இந்த விபத்து சம்பந்தமாக எந்தமாதிரி விசாரணை நடத்தப்பட்டது என்று அறியலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Inspector of Factories who inspected the factory made a preliminary enquiry and he reported that out of nine persons involved, the names of two persons were not found in the Muster Roll and then Sir, dependents of four persons have filed claim petitions in the prescribed forms and the claims have been posted for hearing.

World Agricultural Fair

*432 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) டில்லியில் நடந்த உலக விவசாயப் பொருட் காட்சியில் இந்த இராஜ்ஜியம் பங்கு கொண்டதா ?

(ஆ) அப்படியானல் எந்த அளவில் ?

(இ) இதற்கான செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) About 40,000 square feet of space has been rented for erecting the Madras Pavilion and stalls. The Agriculture, Animal Husbandry, Forest, Irrigation, Industries, Information and Publicity and Co-operation Departments have participated in the Madras Pavilion at the Fair.

(*c*) About rupees 6 lakhs.

SRI A. GOVINDASAMY : டெல்லியில் நடந்த விவசாய கண்காட்சியில் மீன் துறை விஷயமாக எந்தவிதமான விளம்பரமும் நமது அரசாங்கம் செய்ய வில்லையே ? அதற்கு என்ன காரணம் ? மற்ற ராஜ்யங்களெல்லாம் அதில் அதிக கவனம் செலுத்தியிருந்ததா ? நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் அதில் கவனம் செலுத்தாதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏதாவது மீன் துறையில் விசேஷமாக இருந்தால் ஒவ்வொரு ராஜ்யமும் அதைப் பற்றி விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. இதில் ஒன்றும் விசேஷமாகக் காட்டக்கூடியது நம் ராஜ்யத்தில் ஒன்றுமில்லை. அதுவும் குறிப்பிட்ட இடத்திலே அதை வேண்டிய அளவுக்கு தண்ணீரெல்லாம் வைத்துச்செய்ய வேண்டும். அதற்கு இடம் இல்லை.

17th March 1960]

SRI M. P. SARATHI: இந்த உலகப் பொருட்காட்சியை தென்னாட்டிலே நமது சென்னையில் நடத்துவதற்கு டெல்லி அரசாங்கத்தை சிபாரிசு செய்யும்படி நமது அரசாங்கம் கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அடுத்த ஆண்டிலே அகில இந்திய விவசாய பொருட்காட்சி நடத்துவதாக யோசனை இருக்கிறது. இதிலே அந்நிய நாடுகள் சிலவும் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI M. KALYANASUNDARAM: இது ஒரு உலகக் கண்காட்சி. அதில் அநேக தேசங்கள் பங்குகொண்டன. நம்முடைய தேசமும் பங்குகொண்டது. அப்படியிருக்கும்பொழுது நம்முடைய ராஜ்யம் இதில் பங்கெடுத்துக்கொண்ட செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? ஏன் இதற்காக நமது ராஜ்ய சர்க்கார் 6 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உலகம் மத்திய சர்க்காருக்கு மட்டுமல்ல, இந்த ராஜ்ய சர்க்காருக்கும் பங்கு உண்டு.

SRI M. P. SUBRAMANIAM: டெல்லியில் நடந்த விவசாயப் பொருட் காட்சியில் நம்முடைய ராஜ்யம் பங்கு கொண்டதற்கு பலனாக, அன்னிய நாடுகளின் பயிற்சியிலிருந்து நாம் ஏதாவது புதிய விஷயங்களை நம்முடைய ராஜ்யத்தில் புகுத்துவதற்கு முற் படுவோமா? அதே மாதிரி நம்முடைய பயிற்சி முறையில் எதையாகிலும் மற்ற பிரதேசங்கள், மற்ற நாடுகள் நன்மை என்று கருதி அதை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்நிய நாடுகளி லிருந்து வந்திருந்தவர்கள் நம்முடைய ஸ்டாலைப் பார்த்து பாராட்டினார்கள் என்று தெரிகிறது. நம்முடைய நிபுணர்கள் அங்கே போய் அந்நிய நாட்டு ஸ்டால்களையெல்லாம் பார்த்து, எந்த அளவுக்கு நாம் அந்த முறைகளைக் கையாளலாம் என்பதை பற்றி அவர்கள் பரிசீலனை செய்து, அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAIMAN: சமீபத்தில் டெல்லியில் நடந்த விவசாய கண்காட்சியை பார்ப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் நேரடியாக சாகுபடி செய்யக்கூடிய சாகு படியாளர்களா? அப்படியில்லை யென்றால் இனிமேல் நடக் கக்கூடிய கண்காட்சிகளை பார்ப்பதற்காகவாவது சர்க்கார் பூராச் செலவையும் ஏற்றுக்கொண்டு, நேரடியாக சாகுபடி செய்யும் உழவர்களை அனுப்ப முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உழவர்கள் ஏராள மாக போய் பார்த்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ரயில்வே சலுகை கூட வழங்கப்பட்டது.

[17th March 1960

SRI K. R. NALLASIVAM: இந்த உலக கண்காட்சியில் வெளி நாடுகளெல்லாம், சைனு, ரஷ்யா போன்ற நாடுகளெல்லாம், அதுவும் குறிப்பாக சைனு தன்னுடைய நாட்டுப் பயிராகிய கரும்பு, சோளம் போன்றவைகளை அங்கிருந்து கொண்டுவந்து வைத்திருந்தார்கள். ஆனுல் நம்முடைய ராஜ்யத்திலும் கண்காட்சியில் கரும்பு வகைராவும், வாழை, நெல் போன்ற வகை களும் கூட வைக்கப்பட்டிருந்தாலும், அவைகள் சிறப்பான முறையில் அங்கே வைத்துக் காட்டப்படவில்லை. இனிமேலாவது நடக்கக் கூடிய கண்காட்சிகளில் நம்மிடத்தில் இருக்கக்கூடிய சிறப்பான பொருள்களை சேகரித்து வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சைனுவில் கரும்பு, சோளம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதைக் காட்டினுர்கள். நம்முடைய நாட்டுப் பயிர்களும் அதற்கு மேலே எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்பதை யும் அங்கே காட்டப்பட்டது.

SRI K. VINAYAKAM: Is it a fact that the India Government has awarded a meritorious shield to our State for having put up the best stall of the entire lot?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir, our pavilion has got an award.

SRI S. M. ANNAMALAI: நம் மாகாணத்திலிருந்து எத்தனை விவசாயிகள் சென்ருர்கள்? அப்படிச் சென்றவர்களுக்கு என் னென்ன சலுகைகள் செய்யப்பட்டன? சென்ற விவசாயிகளுக்கு சரிவரச் சௌகரியங்கள் செய்யப்படாததால், 2-1/2 நாட்களில் செல்ல வேண்டிய வண்டி, 4 நாட்களானதால், அவர்கள் ஜுரம் கண்டு பெரிதும் அவதியுற்ருர்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரயில்வே பிரயாணத் தில் எத்தனைபேர் அப்படி ஆளாஞர்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

SRI K. R. VISWANATHAN: விவசாயப் பொருட் காட்சியில் பல உலக நாடுகளும், நம் நாட்டில் பல மாகாணங்களும் கலந்துக் கொண்டிருக்கின்றன. நம் மாகாணத்தின் கூடத்தைப் பார்க்க வந்த மக்களின் எண்ணிக்கை, மற்ற நாடுகளின் கூடங் களைப் பார்த்த மக்களின் எண்ணிக்கையோடு ஒத்திட்டுப் பார்க்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நம் மாநில பெவி லியனுக்குச் சிறப்பாக மக்கள் வந்து கொண்டிருந்தார்கள்; புள்ளி விவரங்கள் இல்லாமலே, பார்த்தவர்கள், எப்பொழுதும் நம் பெவிலியனில் மக்கள் இருந்து கொண்டே இருந்தார்கள் என்று சொல்கிருர்கள்.

17th March 1960]

SRI A. GOVINDASAMY: இந்த உலக விவசாயக் காட்சியில், நம் மாநில கூடத்தின் முகப்பில் ராமேஸ்வர கோபுரமும், நாதஸ்வர கோஷ்டியார் சிலைகளும் வைத்திருப்பதற்கு விசேஷக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முகப்பு வசீகரமாக இருக்க வேண்டும், அப்பொழுதுதான் மக்கள் உள்ளே வருவார்கள் என்றுதான் அவை வைக்கப்பட்டது. அப்படி வைத்தது வசீகரமாக இருந்தது என்று அப்புறம் தெரிந்தது.

Washing Soda

*433 *Q*.—SRI A. VEDARATHNAM: கனம கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா, பிளீச்சிங் பவுடர் பற்றுக்குறை உண்டா ? எவ்வளவு ?

(ஆ) இதை நிவர்த்திக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) There is shortage of washing soda, but not of Caustic Soda and Bleaching Powder. No precise data regarding the extent of shortage of Soda ash is available. From application received from Washermens' Associations all over the State it is estimated that the supply falls short of demand by about 50 tons roughly.

(*b*) At the Government's request, a quantity of 100 tons of Soda Ash per month was allotted by the State Trading Corporation, Madras, upto June 1959 for distribution through the stockists of the Corporation to the various Washermen's Associations on permits issued by Assistant Directors of Industries and Commerce. The allotment has been increased to 120 tons per month from June 1959. The possibilities of increasing this allotment to 150 tons are being explored.

SRI A. VEDARATHNAM: இந்த வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா இவற்றில் நிறம்பப் பற்றுக்குறை இருப்பதால், நம் மாகாணத்தில் இது செய்ய வேண்டிய மூலப் பொருள் இருப்பதால், இந்தத் தொழிலே அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா, முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: பொது விவாதத்தின் போது சொன்னபடி, இந்தத் தொழிலே எடுத்து நடத்த தனியார் துறையில் யாராவது முன் வந்தால், எல்லாவிதமான உதவியும் சர்க்கார் செய்யும்.

SRI A. GOVINDASAMY: சலவைத் தொழிலாளர்கள், வாஷிங் சோடா கிடைக்காமல் கஷ்டப் படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? அதை அதிகமாக வழங்குவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: தெரிந்துதான் இருக்கிறது. இதற்கு முன்னல் இதற்கென்று சோடா ஒதுக்கப்படவில்லே. பிறகு ராஜீய சர்க்கார் தலையீடு செய்து, முதலில்